**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.338/2022**

**<u>தேதி : 12.02.2026</u>**

**<u>(வா.சா.2 ) – திரு. ஜாபர் சாதிக்</u>**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

**<u>குறுக்கு விசாரணை :– (பிரதிவாதி தரப்பில்)</u>**

1. நான் கார் ஓட்டிக்கொண்டிருக்கிறேன். நான் தற்போது பேருந்து ஓட்டுனராக உள்ளேன். எந்த தேதியில் கடனுறுதிச் சீட்டு எழுதப்பட்டது என்றால் 21.06.2020 அன்று எழுதப்பட்டது. நான் வாதி அழைத்ததன்பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. பிரதிவாதிக்கு எத்தனை வயதாகிறது என்றால் 40 முதல் 45 வயது இருககும். அவருடைய அப்பா பெயர் எனக்கு தெரியாது. கடனுறுதிச் சீட்டில் பிரதிவாதியின் அப்பா பெயர் எழுதப்பட்டதா என்றால் இல்லை. அதில் பிரதிவாதியின் வயது எழுதப்பட்டதா என்றால் இல்லை. பிரதிவாதியின் விலாசம் சாமியார்புதூர். அதில் விலாசம் என்ன எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது.

2. கடனுறுதிச் சீட்டை பிரதிவாதிதான் வாங்கி வந்தார். எத்தனை மணிக்கு கடனுறுதிச் சீட்டை வாங்கி வந்தார் என்றால் எத்தனை மணிக்கு கடனுறுதிச் சீட்டை அவர் வாங்கினார் என எனக்குத் தெரியாது, அவர் வரும்போது 10.30, 11.00 மணிக்குள் இருக்கும். அவர் கடனுறுதிச் சீட்டை எங்கு வந்து வாங்கினார் என எனக்குத் தெரியாது. முதல் நாளில் என்னிடம் கடன் வாங்கப்போவதாகச் சொல்லி சாட்சிக் கையொப்பம் செய்ய அழைத்தார். மேற்படி விபரத்தை நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

3. கடனுறுதிச் சீட்டை தமிழரசு 11.00 மணிக்கு எழுதினார். என்னை பிரதிவாதி காலை 10.00 மணிக்கு கடனுறுதிச் சீட்டை எழுத அழைத்தார். பணம் கொடுத்த பின்பு கடனுறுதிச் சீட்டு எழுதப்பட்டதா, கடனுறுதிச் சீட்டு எழுதப்பட்ட பிறகு பணம் கொடுக்கப்பட்டதா என்றால் கடனுறுதிச் சீட்டு எழுதப்பட்ட பிறகு, வாதியிடம் கடனுறுதிச் சீட்டை கொடுத்துவிட்டு பணம் பெற்றுக்கொண்டார். கடனுறுதிச் சீட்டில் அடித்தல் திருத்தல்கள் இருந்ததா என்றால் இல்லை. பணம் 11.00 மணிக்கு

கொடுக்கப்பட்டது. கடனுறுதிச் சீட்டு எழுதுவதற்கு 10 நிமிடம் ஆனது. கடனுறுதிச் சீட்டை நேரடியாக நிரப்பினார்களா அல்லது மாதிரி கடனுறுதிச் சீட்டை எழுதிக்கொண்டு நிரப்பினார்களா என்றால் நேரடியாக கடனுறுதிச் சீட்டு எழுதப்பட்டது. அதில் தமிழ் மாதம் எழுதப்பட்டதா, ஆங்கில மாதம் எழுதப்பட்டதா என்றால் எனக்குத் தெரியாது.

4. கடனுறுதிச் சீட்டில் முதலாவதாக யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் தமிழரசு முதலில் கையொப்பம் செய்தார். தமிழரசு ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தார். எத்தனை கையெழுத்து செய்தார் என்றால் முத்திரை வில்லையின் மீது ஒரு கையொப்பமும், அதன் கீழ் ஒரு கையொப்பமும் செய்தார். எத்தனை ரூபாய் மதிப்புள்ள முத்திரை வில்லை ஒட்டப்பட்டது என எனக்குத் தெரியாது. அது வருவாய் முத்திரை வில்லை. கடனுறுதிச் சீட்டு என்ன பேனாவால் எழுதப்பட்டது என்றால் பிரபுவின் கையில் இருந்த பேனாவில் எழுதப்பட்டது. அது என்ன நிற பேனா என்று எனக்குத் தெரியாது. நான் தமிழரசுவின் பேனாவில் கையொப்பம் செய்தேன்.

5. கடனுறுதிச் சீட்டில் முதலில் யார் சாட்சிக் கையொப்பம் செய்தார் என்றால் பிரபுதான் முதலில் கையொப்பம் செய்தார். (சாட்சி மறுபடியும் மாற்றி நான்தான் சாட்சிக் கையொப்பம் செய்தேன் என்று கூறுகிறார்). முதல் சாட்சிக் கையொப்பத்தை நான்தான் போட்டேனா என்றால் ஆம். இரண்டாவது சாட்சிக் கையொப்பத்தை யார் செய்தார் என்றால் தங்கவேல் சாட்சிக் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டில் அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் சரியல்ல. கடனுறுதிச் சீட்டில் தொகை எழுதப்பட்டுள்ள இடத்தில் ரூ என்பதுபோல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

6. நான் சொல்வதுபோல் வாதியிடம், பிரதிவாதி எவ்விதக் கடனும் பெறவில்லை என்றும், நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாகச் சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** :- இல்லை.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.02.12 15:53:50 +0530

Additional Sub Judge,
Palani.